ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதிகளுடன் மோதல்: ராணுவ அதிகாரி வீரமரணம்

ஜம்மு/ஹமீர்பூர், ஏப்.12: ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதிகளுடன் நடைபெற்ற மோதலில் ராணுவ அதிகாரியான சுபேதார் குல்தீப் சந்த் வீரமரணமடைந்தார்.

இதுதொடர்பாக ராணுவ அதிகாரிகள் சனிக்கிழமை கூறியதாவது:

அக்னூர் செக்டாரில் உள்ள கெரி பட்டல் பகுதியில் உள்ள காட்டில் ஆயுதங்களுடன் பயங்கரவாதிகளின் நடமாட்டம் இருப்பது வெள்ளிக்கிழமை நள்ளிரவு தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து அந்தப் பகுதியில் ராணுவத்தினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச்சூடு நடைபெற்றது.

இந்த மோதலில் ஹிமாசல பிரதேசத்தை சேர்ந்த ராணுவ அதிகாரியான சுபேதார் குல்தீப் சந்த் பலத்த காயமடைந்து உயிரிழந்தார். கடுமையான துப்பாக்கிச்சூட்டை தொடர்ந்து பயங்கரவாதிகள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீருக்கு தப்பிச் சென்றிருக்கக் கூடும் என கருதப்படுகிறது என்று தெரிவித்தனர்.

குல்தீப் சந்தின் உடலுக்கு ராணுவத்தினர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். இதைத்தொடர்ந்து அவரின் உடல் இறுதிச் சடங்குக்காக ஹிமாசல பிரதேசத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

ஜம்மு-காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, ராணுவ தலைமைத் தளபதி உபேந்திர துவிவேதி, ஹிமாசல பிரதேச முதல்வர் சுக்விந்தர் சிங் சுக்கு ஆகியோர் குல்தீப் சந்தின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தனர்.

2 பயங்கரவாதிகள் சுட்டுக் கொலை: கிஷ்த்வார் மாவட்டத்தில் உள்ள சத்ரி பகுதியில் பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் பயங்கரவாதி ஒருவர் வெள்ளிக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டார்.

அங்கு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் மேலும் 2 பயங்கரவாதிகள் சனிக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்கள் இருவரும் பாகிஸ்தானை சேர்ந்த ஜெய்ஷ்-ஏ-முகமது பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்பு கொண்டவர்கள் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

மராத்தியர்களுக்கு எதிரான போரில் தோல்வியுற்ற ஔரங்கசீப்

உள்துறை அமைச்சர் அமித் ஷா

ராய்கட், ஏப். 12: 'உலகின் பேரரசர் என்று தன்னைத்தானே அழைத்துக் கொண்டு, மராத்தியர்களுக்கு எதிராக வாழ்நாள் முழுவதும் போரிட்ட முகலாய மன்னர் ஔரங்கசீப், இறுதியில் தோற்கடிக்கப்பட்ட மனிதராக இறந்து மகாராஷ்டிரத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார்' என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சனிக்கிழமை தெரிவித்தார்.

மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜியின் 345-ஆவது நினைவு நாளையொட்டி, மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள புகழ்பெற்ற ராய்கட் கோட்டையில் அமைந்த அவரது நினைவிடத்தில் அமைச்சர் அமித் ஷா சனிக்கிழமை அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து, அங்கு நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் அமித் ஷா பேசியதாவது: சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வேளையில் ஒரு வல்லரசு நாடாக மாறுவதற்கான இந்தியாவின் பயணத்தில் சத்ரபதி சிவாஜியின் 'சுயதர்மம்' மற்றும் 'சுயராஜ்யம்' போன்ற கொள்கைகள் உத்வேகம் அளிக்கின்றன. பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய பாஜக அரசும் சிவாஜி மகாராஜாவின் கொள்கைகளின் அடிப்படையிலேயே செயல்படுகிறது.

சத்ரபதி சிவாஜியின் கல்லறையைக் கொண்டதாகவும் மராட்டிய பேரரசின் தலைநகராகவும் இருந்த ராய்கட் கோட்டை, எதிர்காலத் தலைமுறையினருக்கு உத்வேகத்தின் ஆதாரமாக விளங்குகிறது. சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் புகழை ஒரு மாநிலத்துக்குள் மட்டும் கட்டுப்படுத்த வேண்டாம் என்று மகாராஷ்டிர மக்களிடம் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் சத்ரபதி சிவாஜி ஒன்றிணைத்தார். அவரது மகத்தான மன உறுதி, துணிவு மற்றும் தைரியம் நாட்டை ஊக்குவிக்கின்றன. மேலும், சத்ரபதி சிவாஜியின் அரச சின்னமே இந்திய கடற்படையின் கொடியாகப் பயன்படுத்தப்படுகிறது. இது தேசத்தின் மீதான அவரது நீடித்த செல்வாக்கைக் குறிக்கிறது.

முகலாயர்களின் ஆட்சியை சத்ரபதி சிவாஜி தோற்கடித்தார். உலகின் பேரரசர் (ஆலம்கீர்) என்று தன்னைத்தானே அழைத்துக் கொண்டு மராத்தியர்களுக்கு எதிராக வாழ்நாள் முழுவதும் போரிட்ட முகலாய மன்னர் ஔரங்கசீப், இறுதியில் தோற்கடிக்கப்பட்ட மனிதராக இறந்து, மகாராஷ்டிரத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார்' என்றார்.

இந்நிகழ்ச்சியில் மாநில முதல்வர் தேவேந்திர ஃபட்னவீஸ், துணை முதல்வர்கள் ஏக்நாத் ஷிண்டே, அஜீத் பவார், மராத்திய மன்னர் சத்ரபதி சிவாஜியின் வம்சத்தைச் சேர்ந்த மாநில அமைச்சர் சிவேந்திர சிங் போஸலே, பாஜக எம்.பி. உதயன்ராஜே போஸலே ஆகியோரும் பங்கேற்றனர்.

அரபிக் கடலில் சிவாஜியின் நினைவுச் சின்னத்தைக் கட்டுவதற்கான மாநில பாஜக கூட்டணி அரசின் உறுதிப்பாட்டை வலியுறுத்திய முதல்வர் ஃபட்னவீஸ், இது தொடர்பான வழக்கு மும்பை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும் வழக்கை திறம்பட வாதிட்டு வெற்றி பெறுவோம் என்றும் கூறினார்.

புது தில்லியில் சிவாஜியின் தேசிய நினைவுச் சின்னத்தை அமைக்க வேண்டும் என்ற உதயன்ராஜே போஸலேயின் கோரிக்கையையும் ஏற்றுக்கொண்ட முதல்வர் ஃபட்னவீஸ், மேலும் இந்த விஷயம் குறித்து அமித் ஷாவுடன் விவாதிக்க இருப்பதாகவும் உறுதியளித்தார்.

மகாராஷ்டிரத்தில் உள்ள ஔரங்கசீப்பின் கல்லறையை இடித்து அகற்றக் கோரி வலதுசாரி அமைப்புகள் கடந்த மாதம் போராட்டம் நடத்தின.

நாகபுரியில் நடைபெற்ற போராட்டத்தில் இரு சமூகங்களுக்கு இடையே வன்முறை வெடித்தது குறிப்பிடத்தக்கது.

மகாராஷ்டிர மாநிலம் ராய்கடில் சனிக்கிழமை நடைபெற்ற மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜியின் 345-ஆவது நினைவு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்ற மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, முதல்வர் தேவேந்திர ஃபட்னவீஸ் உள்ளிட்டோர்.

பெகாசஸ் மூலம் உளவு பார்க்கப்பட்ட இந்தியர்களின் விவரங்கள்: உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்

மத்திய அரசுக்கு காங்கிரஸ் கோரிக்கை

புது தில்லி, ஏப். 12: பெகாசஸ் உளவு மென்பொருளை பயன்படுத்தி உளவு பார்க்கப்பட்ட 100 இந்தியர்களின் விவரங்களை உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் சனிக்கிழமை கோரியது.

புது தில்லியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதுதொடர்பாக காங்கிரஸ் பொதுச் செயலர் ரண்தீப் சுர்ஜேவாலா பேசியதாவது: அமெரிக்க நீதிமன்றத்தில் 'வாட்ஸ்ஆப்' மற்றும் பெகாசஸ் உளவு மென்பொருளை உருவாக்கிய இஸ்ரேலைச் சேர்ந்த 'என்எஸ்ஓ' நிறுவனம் இடையே ஒரு வழக்கு நடைபெற்று வருகிறது.

அந்த வழக்கின் விசாரணையில் வெளியாகியுள்ள தகவலின்படி, உளவு மென்பொருள் உரிமங்களை உலகெங்கும் உள்ள அரசுகள் அல்லது அரசு நிறுவனங்கள் வாங்கியதாக என்எஸ்ஓ தெளிவுப்படுத்தியுள்ளது.

இதன்மூலம், இந்தியாவில் உளவு பார்ப்பதற்காக பெகாசஸ் மென்பொருளை மத்திய அரசே வாங்கியது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, உளவு பார்க்கப்பட்ட அந்த 100 பேர் யார்? யாருடைய அனுமதியுடன் அவர்களின் கைபேசிகள் 'ஹேக்' செய்யப்பட்டன? மென்பொருளை வாங்க யார் அனுமதி அளித்தது? அதற்கான பணம் எங்கிருந்து அனுப்பப்பட்டது? இந்தக் கேள்விகளுக்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு பதில் கூற வேண்டும்.

அமெரிக்க நீதிமன்றத்தில் ஆவணங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்பட்டுள்ளதால், இந்திய அரசும் இவ்விவகாரம் தொடர்பான ஆவணங்களை உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அதன்படி, இந்தப் பிரச்னையில் நீதிமன்றம் முழுமையான விசாரணையை மேற்கொள்ள முடியும்.

எதிர்க்கட்சித் தலைவர்கள், நீதிபதிகள், செய்தியாளர்கள், மத்திய அமைச்சர்கள் மற்றும் பிற முக்கிய நபர்கள் உளவு பார்க்கப்பட்ட இந்த விவகாரம் குறித்து நீதித் துறை விசாரணையும் நடத்தப்பட வேண்டும்' என்றார்.

மத்திய அரசுடன் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் கைப்பேசியில் பெகாசஸ் உளவு மென்பொருள் மூலம் ஊடுருவி வேவு பார்க்கப்பட்ட விவகாரத்தை ராகுல் காந்தி வெளிப்படுத்தினார். கடந்த 2021-ஆம் ஆண்டு, இந்த விவகாரம் பெரிய சர்ச்சையாக வெடித்தது. இந்த விவகாரம் குறித்து முழுமையான விசாரணை நடத்தக் கோரி, நாடாளுமன்ற கூட்டத்தொடர் எதிர்க்கட்சிகளால் முடக்கப்பட்டது.

'தேர்தல்களில் பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களை (இவிஎம்) ஊடுருவி 'ஹேக்' (வாக்குப் பதிவு முறைகேடு) செய்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது' என்று அமெரிக்க தேசிய புலனாய்வு இயக்குநர் துளசி கப்பார்ட் அண்மையில் தெரிவித்தார்.

இந்தப் பிரச்னையில் இந்திய தேர்தல் ஆணையமும் மத்திய அரசும் முறையாக விசாரித்து, இவிஎம் நம்பகத்தன்மை குறித்து நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்; உச்ச நீதிமன்றமும் இது குறித்து தாமாக முன்வந்து விசாரிக்க வேண்டும் என்று காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்தது. அமெரிக்காவின் குற்றச்சாட்டை இந்திய தேர்தல் ஆணையம் ஏற்கெனவே நிராகரித்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

உக்ரைனில் இந்திய மருந்து நிறுவன கிடங்கு மீது ரஷியா தாக்குதல்

புது தில்லி, ஏப்.12: உக்ரைனில் இந்திய மருந்து நிறுவன கிடங்கு மீது ரஷியா தாக்குதல் மேற்கொண்டதாக புது தில்லியில் உள்ள உக்ரைன் தூதரகம் சனிக்கிழமை தெரிவித்தது.

இதுதொடர்பாக அந்தத் தூதரகம் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'உக்ரைனில் உள்ள இந்திய மருந்து நிறுவனம் ஒன்றின் கிடங்கு மீது ரஷியா சனிக்கிழமை ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

இந்தியாவுடன் விசேஷமான நட்புறவைப் பேணி வருவதாக கூறும் ரஷியா, இந்திய வணிக நிறுவனத்தைக் குறிவைத்து சிறார்கள் மற்றும் பெரியவர்களுக்கான மருந்துகளை அழித்துள்ளது' என்று தெரிவித்தது.

முன்னதாக, உக்ரைனுக்கான பிரிட்டன் தூதர் மார்ட்டின் ஹாரிஸ் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'உக்ரைன் தலைநகர் கீவில் முக்கிய மருந்து நிறுவன கிடங்கை ரஷியா முழுமையாக அழித்து, சிறார்கள் மற்றும் பெரியவர்களுக்குத் தேவையான மருந்துகளை எரித்துள்ளது' என்றார்.

அந்தக் கிடங்கு மீது ரஷியா ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் தெரிவித்த நிலையில், ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாக மார்ட்டின் ஹாரிஸ் பதிவிட்டார். இதுகுறித்த கூடுதல் தகவல்கள் உடனடியாக வெளியாகவில்லை.

ஜம்மு-காஷ்மீர், பாகிஸ்தானில் நிலநடுக்கம்: உயிர்கள், உடைமைகளுக்கு பாதிப்பில்லை

ஸ்ரீநகர், ஏப்.12: பாகிஸ்தானை மையமாகக் கொண்டு சனிக்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கம் ஜம்மு-காஷ்மீரின் பல பகுதிகளில் உணரப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நில நடுக்கத்தால், உயிர் இழப்புகளோ அல்லது உடைமைகளுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அதிகாரிகள் மேலும் கூறியதாவது:

பாகிஸ்தானின் ராவல்பிண்டியிலிருந்து வடமேற்கே 60 கி.மீ. தொலைவிலான பகுதியை மையமாகக் கொண்டு பூமிக்கு அடியில் 12 கி.மீ. ஆழத்தில் பிற்பகல் 12.31 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 5.5 அலகுகளாக பதிவானது.

இதன் தாக்கம் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு பஞ்சாப் மாகாணத்தின் அட்டோக், சக்வல், மியான்வாலி மாவட்டங்களிலும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் உணரப்பட்டது. பெஷாவர், மார்டன், மொஹ்மண்ட், ஷப்கதார், கைபர் மாகாணங்களில் நில அதிர்வு உணரப்பட்டது.

அதுபோல, ஜம்மு-காஷ்மீரின் பல பகுதிகளில் பிற்பகல் 1 மணியளவில் நிலநடுக்கத்தின் தாக்கம் உணரப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் இதுவரை எந்தவித பாதிப்புகளும் பதிவாகவில்லை என்றனர்.

பாகிஸ்தான் நிலநடுக்க பாதிப்பை தொடர்ச்சியாக சந்தித்து வருகிறது. கடந்த 2005-ஆம் ஆண்டு அங்கு ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் 74,000-க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

ADITYA BIRLA CAPITAL

PROTECTING INVESTING FINANCING ADVISING

ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்

பதிவு அலுவலகம் : இந்தியன் ரேயான் காம்பௌண்டு, வேரவல், குஜராத் - 362266.
கிளை முகவரி : 2வது தளம், கட்டடம் எண். 739, மேல்தளம் நிசான் ஷோரூம், அவிநாசி சாலை, கோயம்புத்தூர் - 641018

"பிற்சேர்க்கை-IV-A"
[விதி 8(6)-க்கான விதிமுறைகளைப் பார்க்கவும்]
அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

24.03.2025 அன்று அக்கூடாதாத் தேசிய நிறுவனச் சட்டத் திரிபாயம் பிறப்பித்த உத்தரவில் முறையாகப் பதிவு செய்யப்பட்ட, 11.03.2024 நாளிட்டப் ஒருங்கிணைப்புத் திட்டத்தின்மூலம் ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் மற்றும் ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட் இடையே ஏற்பட்ட ஒருங்கிணைப்பின் காரணமாக, கீழே உள்ள அட்டவணை "A"யில் குறிப்பிடப்பட்டுள்ள அடமானச் சொத்து கவாதிமம் மற்றும் விற்பனை உள்ளிட்ட 2002-ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை நொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் கீழான அனைத்து தொடர்பாக, ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிட்., மேற்கொண்ட அனைத்து சர்ஃபாசி நடவடிக்கைகளும், ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனமான ஆதித்யா பிர்லா கேபிடல் லிட். நிறுவனத்துக்கு 2025 ஏப்ரல் 1ஆம் நாளில் இருந்து மாற்றப்பட்டுள்ளது. அதனடி, இந்த விற்பனை அறிவிப்பு "ஆதித்ய பிர்லா கேபிடல் லிட்" நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் வெளியிடப்படுகிறது.

அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு. 2002-ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை நொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் இதனுடன் 2002-ஆம் ஆண்டு கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகளில், விதி 8(6) இதனுடன் 9(1) -இன் ஷரத்துகளின் கீழ் இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், ஈடு பெற்று கடனளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டு, ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் (2025 ஏப்ரல் 01 ம் தேதி முதல் ABCL உடன் இணைவுற்றபிறகு, தற்போது ஆதித்யா பிர்லா கேபிடல் லிமிடெட் (ABCL) என அழைக்கப்படுகிறது) - ன் அதிகாரப்பூர்வ அலுவலரால், கவாதிமம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள், **கடன்தாரர்கள் / அடமானதாரர் / ஜாமீன்தாரர்களான M/s. GPR டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட், M/s. திருவேதியர் கார்ப்பரேஷன், திரு. ராம்கப்புராஜ் P, திருமதி R சரோஜா மற்றும் திரு. R கோகுல்** ஆகியோரிடமிருந்து ஈடு பெற்று கடனளித்தவருக்கு **07.11.2024** ம் தேதியின் படி வர வேண்டிய **ரூ.11,78,48,329.28/- (ரூபாய் பதினொரு கோடியே எழுபத்து எட்டு லட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து முந்நூற்று இருபத்து ஒன்பது மற்றும் இருபத்து எட்டு பைசா மட்டும்)** என அடமானம் B இன் நிரல் (B) ல் குறிப்பிடப்பட்டுள்ள கடன் கணக்குகள் மீதான நிரல் (E) ல் விவரிக்கப்பட்டவாறான நிலுவைத்தொகை மற்றும் கடனை அடைக்கும் வரையிலான அதற்கான மேல் வட்டி மற்றும் செலவினங்கள் போன்றவற்றை வசூலிப்பதற்காக "இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்ற வகையில்" மற்றும் மாற்றுக்கோரமுடியாது" என்ற அடிப்படையில் **2025 மே 23** ம் தேதியன்று விற்பனை செய்யப்படும்.

குறைந்தபட்சக் கேட்பு விலை - **ரூ.17,19,32,462/- (ரூபாய் பதினேழு கோடியே பத்தொன்பது லட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து நாநூற்று அறுபத்து இரண்டு மட்டும்)** மற்றும் டேவணித் தொகை - **ரூ.1,71,93,246.20/- (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து இருநூற்று நாற்பத்து ஆறு மற்றும் இருபது பைசா மட்டும்).**

அட்டவணை "A"
அசையா சொத்துக்களின் விவரம்

சொத்தின் உரிமையாளர் : திருமதி. சரோஜா.

அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட சொத்து அமைவிடம்: கோயமுத்தூர் பதிவு மாவட்டம், மதுக்கரை சார்பதிவு மாவட்டம், கோயமுத்தூர் தெற்கு வட்டம், மலுமிச்சம்பட்டி கிராமம், S.F. எண்கள். 330/3 & 303/4-ல் அமையப்பெற்ற புஞ்சை ஏக்கர் 1.56 நிலம் எல்லைகள் மற்றும் அளவீடுகள் பின்வருமாறு : 15 வெட்ட பொது பாதைக்கு- வடக்கு, S.F. எண். 321 நிலத்துக்கு - கீழக்கு, S.F. எண். 330/2 நிலத்துக்கு - தெற்கு, S.F. எண். 335 நெடுஞ்சாலை ரோட்டுக்கு - மேற்கு

இதன் மத்தியில் உள்ள புஞ்சை ஏக்கர் 1.41 பரப்பளவு கொண்ட நிலம் பொதுப் பாதை மற்றும் பொதுப் பயன்பாடுகளுக்காக, லே அவுட் சாலைகளை பயன்படுத்தும் உரிமையுடன்.

இச்சொத்து மலுமிச்சம்பட்டி ஊராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவு கூர்ந்து ஈடு பெற்று கடனளித்தவரின் வலைத்தளம் அஃதாவது https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx மற்றும் வலைத்தளம் https://sarfaesi.auctiontiger.net யையும் கூட பார்வையிடவும்.

அட்டவணை "B"

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்கள் / அடமானதாரர் / ஜாமீன்தாரர் பெயர்	கடன் தொகை	மொத்த நிலுவைத்தொகை 07.11.2024 அன்றுள்ளபடி
(A)	(B)	(C)	(D)	(E)
1.	MINACS0232701, 80001130 & 80002349	M/s. GPR டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட், திரு. ராம்கப்புராஜ் P, திருமதி. R சரோஜா மற்றும் திரு. R கோகுல் கடனதாரர்கள் / அடமானதாரர் / ஜாமீன்தாரர்களாக	5,13,52,881/-	ரூ- 4,79,86,781.62/-
2.	80001131, 80001176, 80002351, 80002385, MINACS0232801	M/s. திருவேதியர் கார்ப்பரேஷன், திரு. ராம்கப்புராஜ் P, திருமதி. R சரோஜா மற்றும் திரு. R கோகுல் கடன்தாரர்கள் / அடமானதாரர் / ஜாமீன்தாரர்களாக	7,33,50,961/-	ரூ- 6,98,61,547.66/-

குறிப்பு : "11.04.2025 நாளிடப்பட்ட முந்தைய விற்பனை அறிவிக்கை & விற்பனை அறிவிப்பு மற்றும் 11.04.2025 நாளிடப்பட்ட நாளிதழ் வெளியீடு ஆகியன விலக்கிக் கொள்ளப்படுகின்றன."

தேதி : 12.04.2025
இடம் : கோயமுத்தூர்
கடன் கணக்கு எண்கள் : MINACS0232701, 80001130, 80002349, 80001131 ,80001176, 80002351, 80002385 & MINACS0232801.

ஆதித்யா பிர்லா கேபிடல் லிமிடெட் - க்காக
ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
(8828204208 / 9710917596)

தெற்கு ரயில்வே

ஸ்டோர்ஸ் எண்: E-07/2025 வழங்குவதற்கான
மின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

பின்வரும் மின்-ஒப்பந்தப்புள்ளிகள் IREPS இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. ஒப்பந்த நிறுவனத்தினர் (Firms), https://www.ireps.gov.in - Login > E.Tender > Goods & Services (New) என்ற இணையதளத்தில் நுழைந்து, அந்தந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தங்கள் விலைப்புள்ளிகளைக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இத்தகைய ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மரபுமுறை (மேனுவல்) விலைப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் மூடும் நேரம்: பிற்பகல் 14.30 மணி.

வ. எண்	ஒப்பந்தப் புள்ளி எண்	விளக்கம்	கெடு நாள்	அளவு
1	44251446	மடக்குக் கதவு (Flap Door) ஏற்பாடுகள்	22.04.2025	1645 எண்ணிக்கை
2	44250444	Bogie சென்டர் Pivot டாப்	22.04.2025	5625 எண்ணிக்கை
3	03255604	Check ரெயில் பிளாக் தயாரித்து வழங்கலுக்கான RC	24.04.2025	10400 தொகுப்பு
4	15251051	வார்ப்பிரும்பு (Cast Iron) கூறுகள்	24.04.2025	2128 தொகுப்பு
5	04250138	LHB -ன் Bogie ஃபிரேம்	24.04.2025	132 எண்ணிக்கை
6	67255063	மேம்படுத்தப்பட்ட உயர் திறன் Draft Gear ஏற்பாடு	24.04.2025	600 எண்ணிக்கை
7	26251655	M/s. REPL பார்ட் நம்பர்: S2529-க்கு காண்டாக்ட்	25.04.2025	2837 எண்ணிக்கை
8	15251047	மின்-தொடரமைப்பு (Power Transmission) பொருத்துதல்	25.04.2025	665 தொகுப்பு
9	26253533	Finger காண்டாக்ட் செக்மெண்ட் பொருத்துதல்	25.04.2025	1047 எண்ணிக்கை
10	67255061	மேம்படுத்தப்பட்ட High Tensile சென்டர் Buffer கப்ளர்	25.04.2025	600 எண்ணிக்கை
11	04250191	மேம்படுத்தப்பட்ட ஸ்குரூ கப்ளிங் பொருத்துதல்	28.04.2025	1203 எண்ணிக்கை
12	03255601A	எலாஸ்டிக் ரெயில் கிளிப், தயாரித்தல் மற்றும் வழங்கலுக்கான RC	30.04.2025	5000000 எண்ணிக்கை
13	04250137	Bogie ஃபிரேம் பொருத்துதல்	02.05.2025	89 எண்ணிக்கை
14	78255361	கதவுச் சட்டம் ஏற்பாடு	02.05.2025	1000 தொகுப்பு
15	04250897	முழுமையான Head Stock	05.05.2025	227 எண்ணிக்கை
16	04250188A	ரப்பர் ஸ்பிரிங் Pack 1000 KGM	05.05.2025	2628 தொகுப்பு
17	06250083	DTBP பிளாக் குஷன்	05.05.2025	12382 எண்ணிக்கை
18	91255238	லைன் மற்றும் டிராக்ஷன் கார்ஹௌட்டர் Cubicle	05.05.2025	1 எண்ணிக்கை
19	78246429	சென்டர் Pivot Top	06.05.2025	540 எண்ணிக்கை
20	16255006	ஆக்சில் Journal Turning மற்றும் Burnishing லேத்	07.05.2025	1 எண்ணிக்கை
21	04250094	முழுமையான தரை-இணைப்பு (Earthing) கேபிள் 70 Sq.mm	07.05.2025	10968 எண்ணிக்கை
22	03255086	டங்க்ஸ்டன் கார்பைடு Bit கட்டிங் செயின் பொருத்துதல் 27 முழுமையான தொகுப்பு	07.05.2025	27 தொகுப்பு
23	04250136	Bogie ஃபிரேம் பொருத்துதல்	08.05.2025	90 எண்ணிக்கை
24	15255002	நிலத்தடி ரயில்வே சமிக்ஞை கேபிள்	09.05.2025	42000 MTRS
25	67255047	தானாக ஓட்டும் வினைல் Wrapping வழங்குதல் மற்றும் பயன்படுத்துதல்.	09.05.2025	3400 SQM
26	04250959	பக்கவாட்டு அதிர்வு தடுப்பான் (Lateral Bump Stop)	12.05.2025	5547 எண்ணிக்கை
27	26255002	கூரையில் பொருத்தப்படும் குளிரூட்டும் கருவி அமைப்பு	12.05.2025	602 எண்ணிக்கை
28	78255230	தொய்வில்லாத (Slack Less) Draw Bar	12.05.2025	112 எண்ணிக்கை
29	78255398	இன்டர் கார் Gangway பொருத்துதல்	16.05.2025	100 எண்ணிக்கை
30	16255007	செங்குத்து கடைசல் இயந்திரம் (Vertical Turning Lathe)	30.05.2025	1 எண்ணிக்கை

பின்வரும் மின்-விலைப்புள்ளி GEM இணையதளத்தில் வெளியாகியுள்ளது. ஒப்பந்த நிறுவனத்தினர் (Firms) www.gem.gov.in என்ற இணையதளத்தை அணுகி, பின்வரும் மின்-விலைப்புள்ளிக்கான (E-Bid) விலைப்புள்ளிகளைக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மரபுமுறை விலைப்புள்ளிகள் (Manual Quotations) அனுமதிக்கப்படாது.

31	GeM/2025/B/6048282	மண் அகற்றும் இயந்திரங்கள் வாடகைக்கு Forklift	17.04.2025	7 எண்ணிக்கை

பின்வரும் திருத்தங்கள் (Corrigenda), IREPS இணையதளத்தில் வெளியாகியுள்ளன. ஒப்பந்த நிறுவனத்தினர் (Firms) விவரங்களை அறிய https://www.ireps.gov.in - Login > E.Tender > Goods & Services (New) என்ற இணையதளத்தை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: E-05/2025, இனம் வரிசை எண்: 50, ஒப்பந்தப்புள்ளி எண்: 15250047, இனம்: திடமான இணைப்பு (Solid Joint) Butt End 32 மிமீ

புலப் பெயர்	தற்போதைய விவரம்	திருத்தப்பட்ட விவரம்
விளக்க விவரம்	RDSO DRG. எண்: SA 6050/M (Adv)ALT-5 -க்கு, திடமான இணைப்பு (Solid Joint) Butt End 32 மிமீ	RDSO DRG. எண்: SA 6050/M (Adv)ALT-PTJ/6 -க்கு, திடமான இணைப்பு (Solid Joint) Butt End 32 மிமீ
ஆவணம்	1. - SA 6050 M ALT PTJ-5	1. - SA 6050 M ALT PTJ-6
	1.a - SA 54 AM ALT PTJ-2	1.a CWM 09825
	1.b - CWM 10506 - Solid Jaw32mm	1.b - CWM 10506 Alt-1
கெடு நாள்	09.04.2025	23.04.2025

பின்வரும் திருத்தங்கள் (Corrigenda), IREPS இணையதளத்தில் வெளியாகியுள்ளன. ஒப்பந்த நிறுவனத்தினர் (Firms) விவரங்களை அறிய https://www.ireps.gov.in - Login > E.Tender > Goods & Services (New) என்ற இணையதளத்தை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஒப்பந்தப்புள்ளி அறிவ